1970 மார்ச் 5]

திரு. என். எஸ். வி. சித்தன்: ஒரு மூட்டை, இரண்டு மூட்டை அல்ல, 1,095 மூட்டைகள் கடத்தப்பட்டிருக்கின்றன என்றால் அது இந்த அரசாங்கத்திற்கு விடப்பட்ட ஒரு சவாலாகும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். சவால்களை டிமாண்டில் வைத்துக்கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அந்த மூட்டைகள் என்றைக்குக் காணாமற் போயின? என்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டன? குற்றவாளிகள் என்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த மூட்டைகள் காணாமற் போனது அரசாங்கத்திற்கு விடப்பட்ட சவாலாகும் என்றால், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களை வழக்குமன்றத்தில் இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்றால் இது எதிர்க் கட்சிகளின் தவறான பிரச்சாரத்திற்கு எதிராக விடப்பட்ட இன்னொரு சவாலாகும்.

Government Pleaders

* 218 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether Government Pleaders in Districts are being appointed on tenure basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர்: ஹைகோர்ட் பப்ளிக்ப்ராசிக்யூடர் மாத்திரம் 5 வருஷ காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். ஏன் ஜில்லாக்களில் உள்ள சர்க்கார் ப்ளீடர்களுக்கும் இதுபோல் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதி மன்றத்தில் பப்ளிக் ப்ராசிக்யூடர் நியமனம் சம்பந்தமாகத் தனி விதி இருக்கிறது. மாவட்ட அளவில் வேறுமாதிரி விதிகள் இருக்கின்றன. அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்படி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கே. விநாயகம்: பப்ளிக் ப்ராசிக்யூடர் ஆனாலும் சரி, கவர்ன்மெண்டு ப்ளீடர்கள் ஆனாலும் சரி, திறமையையே அடிப் படையாக வைத்து நியமனம் செய்யப்படுகிறார்கள், கட்சி அடிப் படையில் இல்லை என்று சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் அமை ச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: யார் யார் திறமையாக இருந் தாலும்—எந்தக் கட்சியில் இருந்தாலும்—அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக திறமை யானவர்கள் கூட நியமிக்கப்படக்கூடாது என்பதல்ல. எந்தக் கட்சியில் இருந்தாலும்—யார் திறமையானவர்களோ அவர் களை ஏற்றுக்கொள்கிறோம்.